# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 10

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**
**இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில் குழு வகுப்புக்களில்**

**பின்வரும் கவிதைகளை வாசிக்கவும்.**

கணிணி பாரு கண்ணாலே - இது
கணிதம் போடும் தன்னாலே
சிலநொடிக்குள்ளே செய்திடுமாம் - இது
சிறந்த அறிவியல் சாதனமாம்

வரவும் செலவும் சரி பார்க்கும் - இது
வாயில்லாமல் விடை சேர்க்கும்
கையும் காலும் இல்லாமல் - இது
கடிதில் விரைந்து வினையாற்றும்.

வளர்ந்த நாட்டார் இதனாலே
வளங்கள் ஏற்றம் காண்கின்றார்.
பிள்ளைப் பருவம் நாள்தொட்டே - இதைப்
பயின்று பயனைப் பெறுவோமோ.

1) **இக்கவிதைகளைப் பயன்படுத்திக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக. கணிணியின் மூன்று பாகங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பயன்களை எழுதுக.**
   1. சுட்டி (MOUSE) ........................................
   2. விசைப்பலகை (KEYBOARD) ........................................
   3. திரை (MONITOR) ........................................

2) **பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.**
   1. வரவும் செலவும் ........................................
   2. கடிதில் விரைந்து ........................................
   3. பிள்ளைப் பருவம் ........................................

3) இக்கவிதைகளில் குறிப்பிடப்படும் நான்கு மனித உறுப்புக்கள் எவை?
   1. ........................................ 2. ........................................
   3. ........................................ 4. ........................................

4) 'வளர்ந்த நாட்டார் இதனாலே வளங்கள், ஏற்றம் காண்கின்றார்' என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?
   ..........................................................................................................................................

5) நொடிப்பொழுதில் விடை சொல்வான் வித்துவான் அல்ல, வாயில்லாமல் பேசுவான் வானொலி அல்ல, கை கால் இல்லாமல் காரியம் செய்வான். மந்திரவாதி அல்ல அவன் யார்?
   ..............................................

**பின்வரும் தொடர்கள் வெளிப்படுத்தும் கருத்தை அடைப்பில் தெரிவுசெய்து எழுதுக.**

6) எவ்விடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ, அவ்விடத்தில் அவ்வாறு நடந்து கொள்பவர்.
(சகபாடி, அறிவிலி, தோழன், விவேகி) ........................................................

7) நல்ல நாளில் கலப்பையில் மாடுகளைப் பூட்டி உழவுத்தொழிலை ஆரம்பித்து வைத்தல்.
(ஏர் பூட்டுதல், ஏர் மங்களம், ஏர் ஏற்றம், கைவிசேடம்) ........................................................

8) ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் விழா.
(வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, அமுதவிழா) ........................................................

**அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெறவேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.**

| |
|---|
| மிருகம், சிறந்த, பசு, அசைபோடும், வீட்டில், வளர்க்கப்படும், உணவை, சாதுவான, பசளையாகும், சாணம், அது, மீட்டு, பசுவின், உண்ட, அதன் |

9) ..............................................................................................................................................

10) ..............................................................................................................................................

11) ..............................................................................................................................................

12) 'இருபதாயிரத்து நூற்றி ஐம்பது' என்பதை பெட்டிக்குள் இலக்கங்களில் எழுதுக.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

**ஒரு வாகனத்தின் மானியில் வேகமும் தூரமும் இரு வேறு நேரங்களில் பின்வருமாறு காட்டியன.**




**வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**

13) இவ்வாகனம் செல்லும் வேகம் யாது?
1. மணித்தியாலத்திற்கு அறுபது கிலோ மீற்றர்கள்.
2. மணித்தியாலத்திற்கு நூற்றி அறுபது கிலோ மீற்றர்கள்.
3. நிமிடத்திற்கு அறுபது கிலோ மீற்றர்கள்.

14) இவ்வாகனம் முதல் நிலையிலிருந்து இரண்டாவது நிலையை அடைவதற்குள் ஓடிய தூரம் எத்தனை கிலோமீற்றர்கள்?
1. 160 கிலோ மீற்றர்கள். 2. 60 கிலோ மீற்றர்கள்.
3. 120 கிலோ மீற்றர்கள்.

15)



இது ஆறு நகரங்களுக்கிடையிலான தூரங்கள் ஆகும். ஒருவர் A யிலிருந்து ஆரம்பித்து மீண்டும் Aக்கு வருகின்றார். அவர் சென்ற தூரம் யாது?

1. 26 km 2. 52 km 3. 160 km

16) கூட்டுக.

1. $\frac{2}{6} + \frac{3}{6} =$ .................................... 2. $\frac{2}{8} + \frac{5}{8} =$ ....................................

**ஒரு குடும்பத்திலுள்ள நான்கு பெண் பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே காணப்படுகின்றன.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அம்பிகா | 26.01.1994 | 2. | இந்திரா | 09.03.2010 |
| 3. | அமலா | 18.04.2004 | 4. | சுனிதா | 12.06.1990 |

17) இவர்களுள் இளையவளிலிருந்து மூத்தவள் வரை வயது அடிப்படையில் ஏறு வரிசையில் பெயர்களை எழுதுக.

..........................................................................

**2004ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டு முதல் தசாப்தத்திற்கு உரியதாகும்.**

18) அம்பிகா பிறந்த ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தமாகும்?

..........................................................................

19) 21ஆம் நூற்றாண்டு இரண்டாம் தசாப்தத்தில் பிறந்தவள் யார்?

..........................................................................

20) A,B ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.


A


B


1


2


3

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

21) அந்நியர் வீட்டிற்குள் நுழைந்துள்ளதை அறிந்து கொள்ளத்தக்க விலங்கின் நடத்தை.
1. நாய் குரைத்தல் 2. நாய் வாலாட்டுதல் 3. பூனை கத்துதல்

22) பழச்சாறு தயாரிப்பதற்கு பயன்படுத்தாத பழம்.
1. மாம்பழம் 2. தோடம்பழம் 3. புளியம்பழம்

23) கடிகாரத்தில் இருக்கக்கூடாத முள்.
1. மணிமுள் 2. மீன்முள் 3. நிமிடமுள்

24) வானில் உயரமாக பறக்கும் பறவை.
1. காகம் 2. கோழி 3. பருந்து

25) ஒருவர் தமது வதிவிடத்தை உறுதிப்படுத்த உகந்தது.
1. கடவுச்சீட்டு 2. ஆளடையாள அட்டை 3. பிறப்புச் சான்றிதழ்

26) கிறிஸ்மஸ் தினம் கொண்டாடப்படுவது.
1. தை 15 2. மார்கழி 15 3. மார்கழி 25

**அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களை அவதானிக்கவும்.**

 +  = 600 ml

 -  = 300 ml

**சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதவும்.**

27)  +  +  = ................ ml

28)  +  -  = ................ ml

**சரியான விடையைத் தெரிவுசெய்க.**

29) ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையில் 3 கொடிகள் வீதம் காணப்பட்டன. பத்து மின்கம்பங்களுக்கிடையில் எத்தனை கொடிகள் காணப்படும்?

1. 27 2. 30 3. 15

30) ஒரு லீற்றர் பானத்தை ஐவர் சமனாகப் பகிர்ந்து அருந்தினார்கள். மூவர் அருந்திய பானத்தில் அளவு யாது?

1. 450 ml 2. 600 ml 3. 750 ml

31) எனது வீட்டிற்கு தெற்கே அக்காவின் வீடு உள்ளது. அக்காவின் வீட்டிற்கு கிழக்கே தம்பியின் வீடு உள்ளது. எனவே தம்பியின் வீட்டிற்கு எத்திசையில் எனது வீடு உள்ளது?

1. வடமேற்கு 2. வடகிழக்கு 3. தென்கிழக்கு

32) அக்காவின் தம்பி எனது அண்ணா. எனது தங்கையின் அண்ணா நான். எனவே நாங்கள் எத்தனை பேர் சகோதரர்கள்?

1. 4 2. 5 3. 6

33) அமாவாசை இருளில் எதனையும் பார்க்கமுடியாதிருப்பதற்கு காரணம் யாது?

1. கறுப்பு நிறம் 2. ஒளியின்மை 3.கண்ணின் இருட்டு

34) பின்வரும் இணைமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுக.

1. அல்லும் பகலும் :- ..................................................................................................
2. மூலை முடுக்கு :- ..................................................................................................
3. ஈன இரக்கம் :- ..................................................................................................

35) பின்வரும் அடுக்குமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் எழுதுக.

1. கத்தைகத்தையாக :- ..................................................................................................
2. சீப்புச்சீப்பாக :- ..................................................................................................
3. கூறுகூறாக :- ..................................................................................................

36) பின்வரும் சொற்களை இணைத்து எழுதுக.

1. மலை + குகை = ...........................................................................
2. கல் + தூண் = ...........................................................................
3. மரம் + வேர் = ...........................................................................

37) பின்வரும் பாடலை வாசித்து அதன் கருத்தை உமது சொந்த மொழி நடையில் எழுதுக.

பொல்லாப் பையன் ஒருவனே<br>
பிரியமான நாயினைக்<br>
கல்லால் அடித்துப் போட்டனன்:<br>
காலை ஒடித்து விட்டனன்.

..................................................................................................................................................

..................................................................................................................................................

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

38) ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல் யானையை வளர்ப்பவன்.
(வீரன், பாகன், கோழை)

39) ஆட்டின் பெண் பால் மறி என்பது போல் யானையின் ஆண் பால்.
(காளை, கடுவன், களிறு)

40) அனாதை என்பது உற்றார், உறவினர் அற்றவர் போல் பிரம்மச்சாரி என்பது.
(திருமணம் செய்தவன், திருமணம் செய்யாதவன், மலடன்)